**மே – 21**

# TNPSC துளிகள்

- அகமதாபாத்-தோலேரா இடையே ₹20,667 கோடி மதிப்பீட்டிலான பகுதி அதிவேக ரயில் திட்டத்திற்குப் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
  - அகமதாபாத்தில் உள்ள சர்க்கேஜ் பகுதியையும் குஜராத்தில் உள்ள தோலேராவையும் இணைக்கும் இந்த இரட்டைப் பாதை இரயில் வழித்தடமானது, உள்நாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் இந்திய இரயில்வேயின் முதல் பகுதி அதிவேக இரயில் திட்டமாகும்.
- நேபாளத்தைச் சேர்ந்த காமி ரிடா ஷெர்பா 32-வது முறையாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ள நிலையில் இதன் மூலம், 1994-ஆம் ஆண்டு தனது முதல் பயணத்தைத் தொடங்கியதிலிருந்து அதிக முறை எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தவர் என்ற தனது சொந்த சாதனையை அவர் மேலும் நீட்டித்துள்ளார்.
  - லக்பா ஷெர்பா தனது 11-வது எவரெஸ்ட் பயணத்தின் மூலம் தனது சொந்த சாதனையை முறியடித்துள்ளதுடன் இவர் 2000 ஆம் ஆண்டில் எவரெஸ்ட் சிகரத்தை வெற்றிகரமாக ஏறி, பின் இறங்கிய முதல் நேபாள பெண்மணி ஆவார்.
- 'ஃப்ளையிங் வெட்ஜ் டிஃபென்ஸ் & ஏரோஸ்பேஸ்' நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட, இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் இயங்கும் தன்னாட்சி போர் விமானமான "கால் பைரவா", முதன்முறையாக ஐரோப்பாவில் தயாரிக்கப்பட உள்ளது.
- அறிவியல் மற்றும் அன்றாட வாழ்க்கையில் ஒளி மற்றும் ஒளி சார்ந்த தொழில் நுட்பங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மே 16 அன்று சர்வதேச ஒளி தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Light for a Sustainable Future" என்பதாகும்.
- டெங்கு தடுப்பு மற்றும் கொசு கட்டுப்பாடு குறித்த விழிப்புணர்வை இந்தியா முழுவதும் ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் மே 16 அன்று தேசிய டெங்கு தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Community Participation for Dengue Control: Check, Clean and Cover" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் பரிந்துரை

- சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்படுவதற்கு 19 பெயர்களை உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் குழு பரிந்துரைத்துள்ளது.
- அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை இங்கு 75 ஆக இருந்த போதிலும், 52 நீதிபதிகளே பணியில் உள்ளனர்.
- இந்தப் பரிந்துரைகளில் 9 நீதித்துறை அதிகாரிகளும், வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்த 10 வழக்கறிஞர்களும் அடங்குவர்.
- இந்த முடிவு 2026 ஆம் ஆண்டு மே 18 அன்று நடைபெற்ற நீதிபதிகளின் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
- இந்தப் பெயர்கள் முன்னதாக 2025 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு இடையே முன்மொழியப்பட்டவை ஆகும்.

- பரிந்துரைக்கப்பட்ட நீதித்துறை அதிகாரிகளில் சென்னை உயர் நீதிமன்றத்தின் தற்போதைய தலைமைப் பதிவாளரும் அடங்குவார்.
- பரிந்துரைக்கப்பட்ட நீதித்துறை அதிகாரிகளில் டாக்டர் பி. முருகன், திருமதி எம்.டி. சுமதி மற்றும் திருமதி எஸ். அல்லி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.
- பரிந்துரைக்கப்பட்ட வழக்கறிஞர்களில் நடராஜன் ரமேஷ், ஜி.கே. முத்துகுமார் மற்றும் ரஜ்னிஷ் பாதியல் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.
- உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் குழுவானது இந்தியாவின் தலைமை நீதிபதி தலைமையில் இயங்குவதுடன் இது உயர் நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் நியமனங்களைப் பரிந்துரைக்கிறது.




## தேசியச் செய்திகள்

### விலக்கு அளிக்கப்பட்ட வாகனங்களுக்குத் தனி ஃபாஸ்டேக்குகள் (FASTags)

- பல வழித்தடத் தடையற்ற போக்குவரத்து (MLFF) சுங்கக் கட்டண முறையின் கீழ், சுங்கக்கட்டணம் விலக்கு அளிக்கப்பட்ட வாகனங்களுக்குத் தனிப் பிரிவில் ஃபாஸ்டேக்குகளை (FASTags) வழங்க அரசு திட்டமிட்டு வருகிறது.
- முன்மொழியப்பட்டுள்ள இந்த அமைப்பானது, ஆயுதப் படைகள் மற்றும் அங்கீகரிக்கப் பட்ட அரசு வாகனங்களை உள்ளடக்கி, அவை சுங்கச்சாவடிகளில் கட்டணமின்றி தடையின்றிச் செல்வதை உறுதி செய்யும்.
- பல வழித்தடத் தடையற்றப் போக்குவரத்து (MLFF) சுங்கக் கட்டண முறை என்பது செயற்கை நுண்ணறிவு (AI), செயற்கைக்கோள் கண்காணிப்பு மற்றும் தானியங்கி எண்கதிர் பலகை அங்கீகாரம் (ANPR) ஆகிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, வாகனங்களை நிறுத்தாமல் மின்னணு முறையில் சுங்கக் கட்டணம் வசூலிக்கும் ஒரு முறையாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், விலக்கு அளிக்கப்பட்ட வாகனங்கள் பிரத்யேகமாக வடிவமைக்கப் பட்ட ஃபாஸ்டேக்குகளைப் பயன்படுத்துவதுடன் இவை சுங்கக்

கட்டணத்தைக் கழிக்காமல் வாகனத்தின் வருகையைப் பதிவு செய்யும்.

- விலக்கு அளிக்கப்பட்ட வாகனங்களின் மையப்படுத்தப்பட்ட தரவுத்தளத்தை உருவாக்குவது அல்லது வரம்பற்ற இலவச அனுமதி கொண்ட பிரத்யேக ஃபாஸ்டேக்குகளை வழங்குவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.




## இந்தியப் பெருங்கடல் பேச்சுவார்த்தை 2026




- இந்தியா, Indian Ocean Region in a Transforming World என்ற கருத்துருவின் கீழ் 10-வது இந்தியப் பெருங்கடல் பேச்சுவார்த்தையை (IOD) புது தில்லியில் நடத்தியது.
- இந்த ஆண்டு, 2025-27 ஆம் ஆண்டிற்கான இந்தியப் பெருங்கடலோர நாடுகளின் சங்கத்தின் (IORA) தலைவர் பொறுப்பை இந்தியா ஏற்கிறது.
- இந்தியப் பெருங்கடல் பேச்சுவார்த்தை (IOD) என்பது அரசு அதிகாரிகள், அறிஞர்கள், சிந்தனைக் குழுக்கள் மற்றும் சிவில் சமூக நிபுணர்களை ஒன்றிணைக்கும் ஒரு தடம் 1.5 (Track 1.5) மன்றமாகும்.
- இந்தப் பேச்சுவார்த்தை முதன்முதலில் 2013-ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவின் பெர்த் நகரில் நடைபெற்ற 13-வது IORA அமைச்சர்கள் குழு கூட்டத்தில் முன்மொழியப் பட்டதுடன் இதன் முதல் கூட்டத்தொடர் 2014-ஆம் ஆண்டில் கேரளாவில் நடைபெற்றது.
- இது இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் (IOR) கடல்சார் பாதுகாப்பு, கடல்சார் பொருளாதாரம், பேரிடர் இடர் மேலாண்மை மற்றும் வர்த்தக ஒத்துழைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- இப்பேச்சுவார்த்தை இந்தியாவின் மகாசாகர் (MAHASAGAR - பிராந்தியங்கள் முழுவதும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான பரஸ்பர மற்றும் முழுமையான மேம்பாடு)

தொலைநோக்குப் பார்வைக்கு ஆதரவளிக்கிறது.

## கிம்பர்லி செயல்முறை மாநாடு 2026

- 2026 ஆம் ஆண்டிற்கான கிம்பர்லி செயல்முறை (KP) அமைப்பின் தலைவராக, இந்தியா 2026-ஆம் ஆண்டின் கிம்பர்லி செயல்முறை இடைக்காலக் கூட்டத்தை மும்பையில் நடத்தியது.
- உலகளாவிய சந்தையில் மோதல்மிக்க பகுதிகளின் வைரங்கள் நுழைவதைத் தடுப்பதற்கான கிம்பர்லி செயல்முறை சான்றிதழ் திட்டத்தை (KPCS) வலுப்படுத்துவதில் இக்கூட்டம் கவனம் செலுத்தியது.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைத் தீர்மானத்தின் கீழ் நிறுவப்பட்ட KPCS அமைப்பின் நிறுவன உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்றாகும்.
- இந்தியாவின் 2026 ஆம் ஆண்டுத் தலைமையின் கருத்துருவானது நம்பகத்தன்மை, இணக்கம் மற்றும் நுகர்வோர் நம்பிக்கை ஆகிய 3C-க்களை அடிப்படையாகக் கொண்டது.
- பட்டை தீட்டப்படாத வைரங்களின் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்காக 2000-ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்க நாடுகளால் கிம்பர்லி செயல்முறை தொடங்கப்பட்டது.
- உலகில் 90% வைரங்களை இந்தியா பட்டை தீட்டுவதுடன் உலகளாவிய வைர வர்த்தக மதிப்பில் சுமார் 75% பங்கை இந்தியா கொண்டுள்ளது.




## உலகளாவிய வெல்லம் உற்பத்தி


- உலகளாவிய வெல்லம் உற்பத்தியில் 70% க்கும் அதிகமான பங்களிப்புடன், உலகின் மிகப்பெரிய வெல்லம் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா தொடர்ந்து நீடிக்கிறது.
- வெல்லம் என்பது கரும்புச் சாற்றை ரசாயன முறையில் சுத்திகரிக்காமல் காய்ச்சுவதன் மூலம் தயாரிக்கப்படும் பாரம்பரியமான, சுத்திகரிக்கப்படாத இயற்கையான இனிப்பாகும்.
- இந்தியாவின் கரும்பு உற்பத்தியில் ஏறக்குறைய 20-30% வெல்லம் தயாரிப்பதற்காகப்

பயன்படுத்தப்படுகிற நிலையில் இது சுமார் 2.5 மில்லியன் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை ஆதரிக்கிறது.

- இந்தியாவின் கரும்பு உற்பத்தியில் உத்தரப் பிரதேசம் 48.5% பங்களிப்புடன் முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (24.1%) மற்றும் கர்நாடகா (10.5%) ஆகிய மாநிலங்களும் உள்ளன.
- இந்தியாவின் வெல்லம் ஏற்றுமதி 2015-16 ஆம் ஆண்டில் 197 மில்லியன் டாலரிலிருந்து 2024-25 ஆம் ஆண்டில் 406.8 மில்லியன் டாலராக அதிகரித்துள்ளதுடன் இதன் மதிப்பு 106.5% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.




## சரண்டா வனம் குறித்த உச்ச நீதிமன்ற உத்தரவு




- 31,468.25 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட சரண்டா வனத்தை வனவிலங்கு சரணாலயமாக அறிவிக்குமாறு ஜார்க்கண்ட் மாநில அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

- ஆசியாவின் மிகப்பெரிய சால் மரக் காடான சரண்டா வனம் ஜார்க்கண்டில் உள்ள ஜாம்ஷெட்பூர் அருகே அமைந்துள்ளது.
- "சரண்டா" என்றால் "எழுநூறு மலைகளின் நிலம்" என்று பொருளாகும் மற்றும் இந்தக் காடு சுமார் 900 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவியுள்ளது.
- இதனை "சரண்டா வனவிலங்கு சரணாலயம்" என அறிவித்த முன்னாள் பீகார் அரசின் 1968 ஆம் ஆண்டு அறிவிக்கையை உச்ச நீதிமன்றம் உறுதிசெய்துள்ளது.
- தேசியப் பூங்காக்கள், வனவிலங்கு சரணாலயங்கள் மற்றும் ஒரு கிலோமீட்டர் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்திற்குள் (ESZ) சுரங்கம் அமைப்பது தடை செய்யப் பட்டுள்ளது என்று நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்


## ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதி




- 2025-26 ஆம் நிதியாண்டில் (FY26) அமெரிக்கா மற்றும் சீனாவிற்குப் பிறகு, ஐரோப்பிய ஒன்றியம் (EU) இந்தியாவின் மூன்றாவது பெரிய கடல் உணவு ஏற்றுமதி சந்தையாக உருவெடுத்துள்ளது.
- ஐரோப்பிய ஒன்றியத்திற்கு 1.593 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான கடல் உணவுகளை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளதுடன் இது இந்தியாவின் மொத்த கடல் உணவு ஏற்றுமதி மதிப்பில் 18.94% ஆகும்.
- FY25 ஆம் நிதியாண்டோடு ஒப்பிடுகையில், ஐரோப்பிய ஒன்றியத்திற்கான கடல் உணவு ஏற்றுமதி மதிப்பில் 41.45% ஆகவும், அளவில் 38.29% ஆகவும் அதிகரித்துள்ளது.
- 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் மீன்வளர்ப்புப் பொருட்களைத் தொடர்ந்து ஏற்றுமதி செய்வதற்கான திருத்தப்பட்ட வரைவுப் பட்டியலில் ஐரோப்பிய ஒன்றியம் இந்தியாவைச் சேர்த்துள்ளது.
- உணவுப் பாதுகாப்பு, மீதிக் கண்காணிப்பு மற்றும் பொறுப்பான மீன்வளர்ப்பு நடைமுறைகளை வலுப்படுத்துவதற்காக கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஏற்றுமதி ஆய்வு சபையில் மேற்கொண்ட முயற்சிகளை இந்தச்

சாதனை பிரதிபலிக்கிறது.

### FDI ஒப்புதல்களுக்கான திருத்தப்பட்ட நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்




- வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்காக, அந்நிய நேரடி முதலீட்டு (FDI) ஒப்புதல்களை வழங்குவதற்கான திருத்தப்பட்ட நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை (SOP) வர்த்தக அமைச்சகம் வெளியிட்டது.
- திருத்தப்பட்ட நிலையான வழிகாட்டு நெறிமுறைகளின்படி, FDI விண்ணப்பங்களுக்கு அதிகபட்சமாக 12 வாரங்களுக்குள் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும். மேலும், வெளி நாட்டு முதலீட்டு வசதி தளம் (FIFP) மற்றும் தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு (NSWS) மூலம் இச்செயல்முறை முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளது.
- விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு நாட்களுக்குள், அதனுடன் தொடர்புடைய அமைச்சகத்தை தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (DPIIT) அடையாளம் காணும்.
- பாதுகாப்பு, தொலைத்தொடர்பு, சிவில் விமானப் போக்குவரத்து, விண்வெளி மற்றும் சுரங்கம் போன்ற முக்கியமான துறைகளில் செய்யப்படும் முதலீடுகளுக்கு மத்திய உள்துறை அமைச்சகத்தின் (MHA) பாதுகாப்பு அனுமதி தேவைப்படும்.
- சுமார் ₹5,000 கோடிக்கு மேல் பங்கு முதலீடு கொண்ட FDI முன்மொழிவுகளுக்குப் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் (CCEA) ஒப்புதல் தேவைப் படும்.
- சீனா, பாகிஸ்தான், வங்கதேசம், நேபாளம், பூடான், மியான்மர் மற்றும் ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட இந்தியாவுடன் நில எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளிலிருந்து வரும் முதலீடுகளுக்குக் கூடுதல் பாதுகாப்பு அனுமதி தேவைப்படும்.

## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### மணல் மற்றும் நிலைத்தன்மை அறிக்கை


- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டமானது (UNEP), Sand and Sustainability: An Essential Resource for Nature and Development என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டது.
- தண்ணீருக்குப் பிறகு உலகில் அதிகமாக வெட்டியெடுக்கப்படும் திடப்பொருள் மணல் என்றும், 2020 ஆம் ஆண்டில் அதன் உலகளாவிய நுகர்வு ஆண்டுக்கு சுமார் 50 பில்லியன் டன்னாக எட்டியுள்ளது என்றும் அறிக்கை குறிப்பிடுகிறது.

- மணல் அகழ்வு என்பது முக்கியமாகக் கட்டுமானம் மற்றும் தொழில்துறை நோக்கங்களுக்காக ஆற்றுப்படுகைகள், கடற்கரைகள் மற்றும் கடற்படுகைகளில் இருந்து மணலை வெட்டியெடுப்பதை உள்ளடக்கியதாகும்.
- அதிகப்படியான மணல் அகழ்வு, ஆற்றுப்படுகை சீரழிவு, நிலத்தடி நீர்மட்டம் குறைதல், பல்லுயிர் இழப்பு மற்றும் கடலோர அரிப்பு ஆகியவற்றிற்கு வழிவகுக்கிறது.
- செயற்கை மணலை (M-Sand) ஊக்குவிக்கவும், வலுவான விதிமுறைகளை உருவாக்கவும், சூழலியல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த பகுதிகளைச் சுரங்கப் பணிகளில் இருந்து பாதுகாக்கவும் இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.




# மாநிலச் செய்திகள்


## இணக்கக் குறைப்பு மற்றும் கட்டுப்பாடுகளை நீக்கும் முன்னெடுப்பு




- இணக்கக் குறைப்பு மற்றும் கட்டுப்பாடுகளை நீக்கும் முன்னெடுப்பின் (CRDI) கீழ், கட்டுப்பாடுகளை நீக்குவதற்கான கட்டம் I மற்றும் கட்டம் II-இல் உள்ள அனைத்து முன்னுரிமைப் பகுதிகளையும் நிறைவு செய்த இந்தியாவின் முதல் மாநிலமாகத் திரிபுரா உருவெடுத்துள்ளது.
- இணக்கச் சுமைகளைக் குறைக்கவும், எளிதாக வணிகம் செய்வதை மேம்படுத்தவும் அமைச்சரவைச் செயலகத்தால் இந்த முன்னெடுப்பு வழிநடத்தப்படுகிறது.

- நிலப் பயன்பாடு, தொழிலாளர் சட்டங்கள், சுற்றுலா, சுற்றுச்சூழல் மற்றும் டிஜிட்டல் நிர்வாகம் போன்ற துறைகளை உள்ளடக்கிய அனைத்து 51 சீர்திருத்தப் பகுதிகளையும் திரிபுரா நிறைவு செய்துள்ளது.
- வணிக சீர்திருத்தச் செயல்திட்ட மதிப்பீட்டுக் கட்டமைப்பில் இம்மாநிலம் 94% மதிப்பெண்ணைப் பெற்றுள்ளது.
- 394 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) மூலம் சுமார் ₹35,140 கோடி மதிப்பிலான முதலீட்டுத் திட்டங்களைத் திரிபுரா ஈர்த்துள்ளது.
- எளிமையாக்கப்பட்ட நிலப் பயன்பாட்டு வகைகள், நெகிழ்வான மண்டல அமைப்புகள் மற்றும் நிலப் பயன்பாடு மாற்றம் (CLU) ஒப்புதல்களுக்கான சுயச் சான்றிதழ் ஆகியவை இச்சீர்திருத்தங்களில் அடங்கும்.

## மருந்து கண்காணிப்பு இணையதளம் – கர்நாடகா




- தரமற்ற மருந்துகள் (NSQ) மற்றும் போதை மருந்துகள் மற்றும் மனநலப் பொருட்களின் (NDPS) மருந்து விற்பனையைக் கண்காணிக்க இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த டிஜிட்டல் இணையதளத்தை கர்நாடகா அறிமுகப்படுத்தியுள்ளது.
- நிகழ்நேர மருந்துத் தரக் கண்காணிப்பிற்காக மாநில உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்தால் (FDA) இந்த அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஒரு மருந்துத் தொகுதி தரமற்றது (NSQ) என அறிவிக்கப்பட்டவுடன், விநியோகச் சங்கிலி முழுவதும் அதன் விற்பனையை இந்த இணையதளம் தானாகவே தடுத்து நிறுத்தும்.
- NDPS மருந்துகளை விற்கும் சில்லறை விற்பனையாளர்கள், மருந்துகளை வழங்குவதற்கு முன் நோயாளி, மருத்துவர் மற்றும் மருந்துச் சீட்டு விவரங்களைப் பதிவேற்ற வேண்டும்.
- வெளிப்படைத்தன்மை மற்றும் நோயாளிகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக மருந்துகளின் இருப்பு, மருந்துகளைத் திரும்பப் பெறுதல் மற்றும் சந்தேகத்திற்குரிய மருந்துச்சீட்டு முறைகள் ஆகியவற்றை இந்த இணையதளம் கண்காணிக்கிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★